பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 30 வெள்ளிக்கிழமை 15.07.2022 கதிர் 252

**இனி இது ரகசியம் அல்ல!**

செவ்வாயன்று காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மத்தியில் சுமந்திரனும் சாணக்கியனும் ஆற்றிய உரைகள் தமிழ் அரசி யல் பரப்புக்களில் பலத்த வாதப் பிரதிவாதங்களை - சர்ச்சைகளை - ஏற்படுத்தி இருக்கின்றன. ☞2

# கோட்டா ராஜினாமா! ராஜபக்ஷ யுகம் முடிவு

## சபாநாயகர் இன்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் மக்களின் தன்னெழுச்சிக்கு வரலாற்றுப் பெருவெற்றி




கொழும்பு, ஜுலை 15

இலங்கையில் மக்கள் தன்னெழுச்சி எதிர்ப்புப் போராட்டத்தால் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ தனது ஜனாதிபதிப் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

அவரின் உத்தியோகபூர்வ ராஜினாமாக் கடிதம் சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக சபாநாயகருக்கு நேற்றிரவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ☞2

## தம்மிக்கவின் பொறுப்புக்களை பிடுங்கினார் பதில் ஜனாதிபதி!



பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் திருத்தியமைக்கப்பட்டு, நேற்று விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி ☞2

## கோட்டா விலகலுக்கு மாலைதீவு வரவேற்பு



கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார் என்று ருவிட்டர் செய்தியில் நேற்றிரவு ☞2

## பிரதமர் பதவிக்கு சஜித்தின் பெயர்!



கொழும்பு, ஜுலை 15

சர்வகட்சி அரசாங்கத்தின் பிரதமர் பதவிக்காக எதிர்க்கட்சிகள் பரிந்துரைக்கவுள்ள பெயரை இன்று இடம்பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் விசேட கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ☞2

## நாடாளுமன்றம் இன்று கூடாது கட்சிகளின் தலைவர்கள் கூடுவர்

நாடாளுமன்றம் இன்று கூடும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றைய தினம் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெறமாட்டாது என சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இராஜினாமா கிடைத்த பின்னர் 3 நாள்களுக்குள் நாடாளுமன்றம் கூட்டப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கிடையில் அவர் கூட்டியுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறுகின்றது.

அதில் பெரும்பாலும் ☞2

## கந்தர்மடத்தில் ரயில் மோதி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற ரயில் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறையில் இருந்து, யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில், கந்தர்மடப் பகுதியில் அமைந்துள்ள ரயில் கடவையின் ஊடாக கடக்க முற்பட்ட நபர் ஒருவர் மீது ☞2

## நான்கு எரிபொருள் கப்பல்கள் நாளை மறுதினம் வருகின்றன!

நாளை மறுதினம் 17ஆம் திகதி நாட்டிற்கு மூன்று டீசல் கப்பல்களும்மற்றும்பெற்றோல் ஏற்றிய கப்பல் ஒன்றும் வருகை தரவுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தலா 40 ஆயிரம் மெட்ரிக்தொன் அடங்கிய மூன்று டீசல் கப்பல்களும் 35 ஆயிரம் மெட்ரின் தொன் ஏற்றிய ஒக்டேன் 92 ரக பெற்றோல் கப்பல் ஒன்றும் இலங்கையை வந்தடையவுள்ளன.

## மண்டைதீவில் 46 கிலோ கஞ்சா கடற்படை மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுலை 15

யாழ்ப்பாணம் மண்டைதீவுக் கடற்கரையில் 46 கிலோ கஞ்சா நேற்று மாலையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள் ளது.

இந்தியாவில் இருந்து இந்தக் கஞ்சாவைக் கடத்தி வந்தோர் கடற்படையினரைக் கண்டதும் அவற்றைக் கை விட்டுச் சென்று இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

## எரிபொருள் விநியோகத் திட்டம்; விவரம் கேட்கிறது உயர்நீதிமன்று

கொழும்பு, ஜுலை 15

அத்தியாவசிய சேவைகளுக்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை விநியோகிப்பதற்கான முறையான வேலைத்திட்டத்தை தயாரித்து நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

## எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் மரணம்!

### கால்வாயில் இருந்து சடலம் மீட்பு

சிலாபம் லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் வரிசையில் காத்திருந்து விட்டு பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முன்னேஸ்வரம் வீதியின் கால்வாயில் இருந்து அவரது சடலம் நேற்று முற்பகல் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெற்றோல் இன்மையால் மோட்டார் சைக்கிள் எரிபொருள் தாங்கியை சைக்கிளில் வைத்துக் கொண்டு அவர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குப் பிரவேசித்துள்ளார்.

இந்தநிலையில், அவரது சடலம் மீட்கப்பட்ட இடத்தில் குறித்த சைக்கிள் இருந்தது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் - ரம்பேபிட்டி பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவற்றை ஒட்டி இரண்டு வெளி நாட்டுப் புலம்பெயர் நண்பர்கள் – ஒருவர் 40 வயதுக்காரர், மற்றவர் மிகவும் வயதில்மூத்தவர் – தொலைபேசிமூலம்தொடர்பு கொண்டு சீற்றத்துடன் முன் வைத்த கருத்துக்களை இன்று வாசகர்களுடன் பகிர விரும்புகிறேன். அந்த இளைஞர் கூறியவற்றை முதலில் பார்ப்போம்.

அந்தப் போராட்டக்காரர்கள் முன்னிலையில் சுமந்திரன் கூறியவற்றின் பிரதான சாரம் என்ன? ‘இந்த விடயங்களில் நாங்கள்(சுமந்திரன் போன்ற அரசியல்வாதிகள்) வெறுமனே கருத்து கூறுகின்றவர்கள்தான். நீங்கள்தான் (காலி முகத்திடல் போராட்டக்காரர்கள்தான்) களத்தில் காரியமாற்றி விட்டு வருகின்றீர்கள்!’ – என்ற சாரப்பட அந்தப் போராட்டக்காரர்களின் செயல் திறமையை – சாதனைப் பெறுபேறுகளை – முதலில் புகழ்ந்தார் சுமந்திரன். அடுத்து அவர் ’கோட்டாபய பதவி துறந்தால் பதில் ஜனாதிபதியாகத்தன்னும் ஒரு நாள் கூட ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இருக்க அனுமதிக்கக் கூடாது. அதைத் தடுக்க வேண்டும். அது நீங்கள் செய்ய வேண்டியது!’ – என்றார். அவர் அன்று உசுப்பேத்தியதின் விளைவு, அடுத்த நாள் காலையில் ரணில் பதில் ஜனாதிபதியானதும் பிரதமர் அலுவலகம் மக்கள் கூட்டத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டது.

அப்படிப் பார்த்தால் மே ஒன்பதாம் திகதி அலரி மாளிகைக்குள் தமது ஆதரவாளர்களுக்கு உசுப்பேத்தி ‘கோட்டா கோ கம’ போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தச்செய்த ஜோன்சன் பெர்னாண்டோவுக்கும், அதே ‘கோட்டா கோ கம’ போராட்டக்காரர்களை உசுப்பேத்தி, பிரதமர் அலுவலகத்தை ஆக்கிரமிக்க வைத்த சுமந்திரனுக்கும் என்ன வேறுபாடு?

– இப்படிக் கேட்டார் அந்த நண்பர். என்னிடம் பதில் இருக்கவில்லை.

அடுத்து மூத்த உறுப்பினர் தந்த தகவலை நான் உள்வாங்கி, அப்படியே தொகுத்துத் தருவது பொருத்தம் என நினைக்கிறேன். அவர் கூறியவை:–

1977 கால கட்டம். தமிழ் விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் ஆயுத வழிக்கு திரும்பிய வேளை. பல்வேறு இயக்கங்களும் முகிழ்த்திருந்த சமயம் அது.

1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு தமிழ் மக்களின் ஆணையைப் பெறும் எழுச்சித் தேர்தலாக 1977 ஜூலைப் பொதுத்தேர்தலை அணுகியது தமிழர் விடுதலைக் கூட்டணி. தமிழர் தாயகத்தில் – வடக்குக் கிழக்கில் – கல்குடாத் தொகுதியைத் தவிர ஏனைய 17 தொகுதிகளிலும் பெருவெற்றி ஈட்டி தமிழீழத்துக்கான தமிழ் மக்களின் ஆணையை நிலை நிறுத்தியது கூட்டணி.

ஜூலைத் தேர்தலில் கூட்டணி சார்பில் கிழக்கில் இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவிலில் இரண்டாவதாக வெற்றியீட்டி கூட்டணி எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட கனகரத்தினம், சில மாதங்களில் – 1977 டிசம்பரில் – ஆளும் கட்சிக்குத் தாவி மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்றார்

அதிர்ந்து போன அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளருமான அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக எழுந்து, நின்று, கட்சி மாறிய கனகரத்தினத்தைப் பார்த்து ‘உன் தலையில் இடி விழ!’ என்று திட்டினார். அதனையே – ‘உன் தலையில் இடி விழ!’ என்பதையே – முதலாம் பக்கப் பிரதான தலைப்பாக்கி, தமிழரசு ஏடான ‘சுதந்திரன்’ செய்தி பிரசுரித்தது.

‘சுதந்திரன்’ பத்திரிகையின் முதலாம் பக்கத்தில் சுதந்திரன் என்ற Master Headline இருந்த இடத்திற்குப் பக்கத்தில் கனகரத்தினத்தின் முகப்படம் வேண்டும் என்று தலைகீழாகப் பிரசுரமாகியிருந்தது.

சொல்ல வேண்டிய செய்தியை அமிர்தலிங்கம் சுதந்திரன் ஊடாகச் சொல்லிவிட்டார். இரண்டு, மூன்று வாரங்களுக்குள், 1978 ஜனவரி 27 கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள கனகரத்தத்தின் வீட்டின் முன்னால் வைத்து அவர் சுடப்பட்டார். படுகாயம் அடைந்த அவர் ஏப்ரல் 20 ஆம் தேதி காலமானார்.

அமிர் கோரியது ‘இடி விழ!’. ஆனால் விழுந்ததோ சூடு. அல்பர்ட் துரையப்பா வரைச் சூடு விழுவதற்கும் தமிழ் தலைவர்களின் ஆசீர்வாதம் இருந்தது. ‘நாங்கள் அகிம்சைவாதிகள், சாத்வீகப் போராட்டக்காரர்கள்’ – என்று கூறிக்கொண்டும் – வன்முறைகளைக் கண்டிக்கும் அறிக்கைகளைவெளிப்படையாகவெளியிட்டுக் கொண்டுதான் – இந்த ஆசீர்வாதத்தைக் கூட்டமைப்பினர் நல்கினர். கடைசியில் துப்பாக்கிச் சன்னங்கள் அவர்களையே பதம்பார்க்கும்வேதனையான நிகழ்வுகள் அரங்கேறின. அன்றைய வழியில்தான் இன்று சுமந்திரனும் ஆயுதப் போராட்டத்தையும் வன்முறையையும் தாம் ஏற்கவில்லை, ஆதரிக்கவில்லை என்கிறார் – அமிர்தலிங்கமும் ஏனையோரும் தங்களை அஹிம்சைவாதிகள் என்று கூறி வந்தமை போல.

ஆனால் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் முன் அவர் ஆற்றிய உரை, நாடாளுமன்றத்தின் சட்ட ஆட்சிக்கு மாறாக, ஒரு வன்முறை ஆட்சிக்கு மறைமுகமாக ஆதரவை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. ஆட்சியாளர்கள் மீது அதிருப்தியுற்ற மக்கள் நடத்தும் போராட்டம் தவறு என்று நான் கூறவில்லை. அது வன்முறை வடிவத்திற்குள் நுழைவதும் – நுழைந்ததும் – கூட தவிர்க்கப்பட முடியாத கட்டாயம்தான். ஆனால் அத்தகைய வன்முறையைத் தான் ஒருபோதும் ஆதரிக்கவில்லை, அங்கீகரிக்க என்று தன்னைத் திரும்பத் திரும்ப முன்னிலைப் படுத்தும் சுமந்திரன் – தமிழ் போராளிகளின் நிறைவேந்தல்களில் அவர்களுக்கு அஞ்சலிக்கப் பின்னடிக்கும் சுமந்திரன் – தென்னிலங்கையில் காலி முகத்திடல் போராட்டக்காரர்களின் வன்முறை விடயத்திலும் அதே போல செயற்பட்டிருக்க வேண்டும். அவரது அன்றைய நடவடிக்கை அவர் மேதாவித்தனம் பண்ணும் சட்ட வியாக்கியானத்தின் கீழ் குற்றம் என்று நிரூபிக்க முடியாததாக இருக்கலாம். ஆனால் தார்மீகத்தில் பார்த்தால் வன்முறைக்குத் தூபம் போடும் பெரும் குற்றம்தான் இது.

தென்னிலங்கைத் தரப்பாருடன் போய் இந்தக் ‘குற்றத்தை’ இழைக்கும் தேவை சுமந்திரனுக்கு ஏன் வந்தது என்பது புரியவில்லை. அமிர்தலிங்கம் போன்றோர் எதை வளர்த்தார்களோ, கடைசியில் அதனாலேயே வாங்கிக் கட்டினார்கள் – 15 வருடங்களில் பின்னர்.

ஆனால் சுமந்திரன், தெற்கில் ஆசீர்வாதம் கொடுத்த ’கோட்டா கோ கம’ போராளிகளின் செயற்போக்கு, தனது கதையைப் பின்பக்கமாகத் திருப்பி, அவருக்கு எதிராகச் செயல்பட ஆகப் பதினைந்து நாள்கள்கள் போதும் என்பதை அவர் புரிந்து கொள்வது நல்லது. – என்றார்.

அந்த வயோதிபர், இந்த வாலிபர் – இந்த இருவரதும் கருத்துக்கள் வாசகர்களுக்குச் சமர்ப்பணம். சாணக்கியனுக்கும் சுமந்திரனுக்கும் சமர்ப்பணம். இக்கூற்றுகளில் ஏதேனும் பிரயோசனமான வழிகாட்டுதல் இருந்தால் அவர்களே அவற்றை உள்வாங்கிக் கொள்ளட்டும்.

– மின்னல் –

---

## கோட்டா விலகலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ள மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட், அதை வரவேற்றும் உள்ளார்.

இதன் காரணமாக இலங்கை முன்னேறும் எனத் தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையில் இருந்திருந்தால், அவர் அந்தப் பதவியை இராஜினாமா செய்திருக்கமாட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்

அதுமட்டுமல்லாமல், மாலைதீவு அரசு அந்தத் தருணத்தில் நடந்துகொண்ட விதத்தைப் பாராட்டுவதாகவும் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் மேலும் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரும் திங்களன்று நாடாளுமன்றத்தைக் கூட்டத் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## கந்தர்மடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோதியுள்ளது.

இதன்போது, அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் யாழ்ப்பாணம் ஒட்டுமடம் பகுதியை சேர்ந்த சின்னத்தம்பி மகேந்திரசா (வயது 59) என்பவரே உயிரிழந் துள்ளார்.

---

### இனிமேலும் இது கோட்டாவின் சொத்து அல்ல

# போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட அரச கட்டடங்கள் நேற்று மீளக்கையளிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 9ஆம் திகதியன்று போராட்டக்காரர்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்த ஜனாதிபதி மாளிகை உட்பட அரச கட்டடங்கள் அனைத்தும் பாதுகாப்புப் படையினரிடம் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டன. எனினும், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் – காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் – அரசுக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அமைதியை ஏற்படுத்தி புதிய அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கைப்பற்றப்பட்ட அரச கட்டடங்களை மீளக் கையளிக்குமாறு காலிமுகத்திடல் போராட்டக்காரர்களிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்துத் தம்மால் கைப்பற்றப்பட்ட ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை மற்றும் பிரதமர் செயலகம் ஆகியவற்றைப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் மீள ஒப்படைப்பதற்குக் காலிமுகத்திடல் போராட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் குழுவினர் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

நேற்றுக் காலை விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி அவர்கள் அதற்கான இணக்கத்தை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில், தம்மால் கைப்பற்றப்பட்ட அரச கட்டடங்களை நேற்றுப் பிற்பகல் பாதுகாப்புப் படையினரிடம் மீளக் கையளித்துவிட்டு அங்கிருந்து போராட்டக் குழுவினர் வெளியேறியுள்ளனர்.

மக்கள் வரிப்பணத்தால் இயங்கும் மக்கள் சொத்துக்களை மக்கள் எழுச்சியால் கைப்பற்றினோம். இது சரித்திரத்தில் மிக முக்கியமான நிகழ்வு. இதன் மூலம் மக்களுக்கு நலன் செய்யாத நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி மக்களால் விரட்டியடிக்கப்பட்டார் என்பதை உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்பதே எமது தேவையாக இருந்தது. அதை நிறைவேற்றிக் காட்டியுள்ளோம். எமது போராட்டத்தின் இலக்கு கோட்டாபய அரசை அடியோடு கவிழ்த்து மக்கள் அபிலாகைளை வென்றெடுக்கக் கூடிய – நாட்டுக்கு நலன் செய்யக்கூடிய ஆட்சியை உருவாக்குவதே தவிர, அரச கட்டடங்களைப் பிடித்து அதனுள் வெற்றியைக் கொண்டாடுவது அல்ல. – என்று போராட்டக்காரர்களால் தெரிவிகிக்கப்பட்டது.

---

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய கலந்துரையாடலில், ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, 10 கட்சிகளின் பிரதிநிதிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் டளஸ் அழகப்பெருமவின் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் மக்கள் விடுதலை முன்னணி கலந்துக்கொள்ளவில்லை.

---

## தம்மிக்கவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்தலின் பிரகாரம் முன்னாள் அமைச்சர் கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேராவின் கீழ் இருந்த பல திணைக்களங்கள் பதில் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், முதலீட்டு ஊக்குவிப்புத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட தம்மிக்க பெரேராவுக்கு ரத்னாலங்கா பாதுகாப்பு நிறுவனம், முதலீட்டுச்சபை மற்றும் துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு ஆகியவற்றின் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.

எனினும், அந்த பொறுப்புக்கள் அனைத்தும் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியின் கீழ் தற்போது கொண்டு வரப்பட்டுள்ளன.

---

## கோட்டா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலத்த எதிர்ப்புக்களையும் அழுத்தங்களையும் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் சந்தித்த கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் அதிகாலை இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான அன்டனோவ் 32 ரக விமானத்தில் நாட்டை விட்டு மாலைதீவுக்குத் தப்பியோடினார்.

அங்கிருந்து நேற்று மாலை சவூதி விமானச் சேவைக்குச் சொந்தமான SV 788 என்ற விமானத்தில் சிங்கப்பூர் சென்ற அவர், அங்கிருந்து தனது பதவி விலகல் கடிதத்தைச் சபாநாயகருக்கு அனுப்பினார்.

அந்தக் கடிதத்தின் சட்டபூர்வத் தன்மை குறித்து பிரதம நீதியரசரர் மற்றும் சட்டமா அதிபரர் ஆகியோருடன் கலந்துரையாடி – உறுதிப்படுத்திய பின்னர், சபாநாயகரால் கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இன்றைய தினத்துக்குள் சபாநாயகரின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று சபாநாயகர் ஊடகப் பிரிவு அறிவித்தது.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயமாக சிங்கப்பூர் வர அனுமதிக்கப்பட்டார் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

எவ்வாறாயினும், அவர் புகலிடம் கோரவில்லை என்றும், அவருக்கு எந்த விதமான பாதுகாப்பும் வழங்கப்படவில்லை என்றும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அரசியல் பாடம்

ராஜபக்ஷக்கள் ஏற்படுத்திய களேபரத்தில் முழு நாடுமே – குறிப்பாகத் தலைநகர் கொழும்பே – குழம்பிப் போய்க் கிடக்கின்றது. ‘தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்’ என்ற நிலைமை.

பற்றாக்குறையான எரிபொருள் கணிசமாக வந்துள்ளது. எரிவாயுவும் கிடைத்துள்ளது. உரமும் வந்து சேர்ந்துள்ளது. ஆனால் கைகெட்டியது வாய்க் கெட்டாது என்ற இழுபறி நிலைமை.

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடி, பதவியை ராஜினாமாச் செய்த பின்னரும் தேசியப் பிரச்சினைக்கு – அரசியல் நெருக்கடிக்கு – தீர்வு காண முடியாத இக்கட்டு நீடிக்கவே செய்கின்றது.

இப்போது வெளிப்பட்டிருப்பது பொருளாதார நெருக்கடி என்றாலும் – கடன் செலுத்த முடியாத சிக்கல் என்றாலும் – பொருளாதாரமும், கடன் மீள் செலுத்துகையும் தான் பிரச்சினைகள் அல்ல.

அவை வேறு ஒரு நோயின் குணங்குறி. பொருளாதார நெருக்கடியைச் சமாளித்து, கடன் கொடுப்பனவுகளைக் கொடுத்தால் மட்டும் நாடு நிமிர்ந்து விட முடியாது. பிரதான சிக்கலுக்கு – அடிப்படைப் பிரச்சினைக்கு – தீர்வு காணப்படாமல் நாடு மீளவே முடியாது.

கடந்த புதனன்று, காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் முன்னிலையில் உரையாற்றுகையில் தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இதனை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

“இன்றைய நெருக்கடிக்கு மூல காரணம், தீர்க்கப்படாத இனப்பிரச்சினைதான். அதற்கு பதில் தேடாமல் இந்நாட்டின் நெருக்கடிகளுக்குத் தீர்வு தேட முடியாது. இந்நாட்டை ஓர் இனத்துக்கும், மதத்துக்கும் மாத்திரம் வரையறைப்படுத்த வேண்டாம். ஆகவே, இந்நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம், நாடாக வேண்டும். அதுபோல் மதசார்பற்ற நாடாகவும் வேண்டும். இந்தக் கருத்துகள் நாட்டின் அரசமைப்புக்குள், சட்ட வரையறைக்குள் வர வேண்டும். அப்போதுதான் இவற்றுக்கு சட்ட வலு கிடைக்கும்

“கோட்டா போக வேண்டும். ரணிலும் போக வேண்டும். இவர்கள் போய் சஜித் வந்தாலும், அல்லது இந்த ‘கோட்டா கோ கம’ குறூப்பே வந்தாலும், நாம் எமது பிரச்சினையைப் பேசா விட்டால், அவற்றுக்காக நாம் போராடாவிட்டால், அவை தீரா. குறைந்தபட்சம் அரங்கத்துக்கே வரா.

“ஆகவேதான், நான் எங்கே போனாலும், எங்கே மேடை கிடைத்தாலும், நமது மலையகத் தமிழர், ஈழத் தமிழர், முஸ்லிம்கள் என நம்மவர் பிரச்சினைகளைப் பேசுகிறேன். எல்லா மொழிகளிலும் பேசுகிறேன். முக்கியமாக சிங்கள வர்கள் மத்தியில் பேசி விளக்குகிறேன்.

”இதனாலயே சில சிங்களப் பிரமுகர்களுக்கு என் மீது கொஞ்சம் சந்தோசம் இல்லாத கோபம். இவர் என்ன, ‘மதசார்பின்மை’, ‘இலங்கை என்பது பல்லின, பன்மொழி நாடு’ என்றெல்லாம் பேசுகிறார் என யோசிக்கிறார்கள். நான் இவர்களை பற்றியெல்லாம் கவலைப் படுவதில்லை.

“ஏனெனில் பெரும்பான்மை அரசியல் விடயங்களைப் பேச 90 வீத நாடாளுமன்றமும், பிக்குகள், சிங்கள சமூகப் பிரதானிகள், ஊடகங்கள் என எத்தனையோ தரப்புகள் உள்ளன.

“ஆகவே நாமும் பெரும்பான்மை அரசியல்வாதிகள் பேசும் விடயங்களைப் பேசி, அவர்களை சந்தோஷப்படுத்தி, கைத்தட்டு வாங்குவதில் எந்தப் பயனும் எமது மக்களுக்கு, எனக்கு வாக்களித்த மக்களுக்கு இல்லை.

“நமது பிரச்சினைகளை நாம் பேசினால்தான் உண்டு. இது எனக்கு வரலாறு கற்றுக்கொடுத்த பாடம்.”

– இவை மனோ கணேசனின் கூற்றுக்கள். இலங்கையர்களுக்கு – நமது தலைவர்களுக்கும் கூட – அரசியல் கண் திறக்கும் பாடம் இது!

# நாட்டை சிறப்பாக நிர்வகிக்க 4 ஆவது தூண் உருவாக்கம்!

## முன்னிலை சோசலிசக்கட்சி இடித்துரைப்பு



மக்களின் இறையாண்மை பலத்தை நடைமுறைப்படுத்தும் புதிய தூண் உருவாகியுள்ளதாகவும் நாடாளுமன்றத்தில் இருக்கும் கட்சிகள் இல்ல விளையாட்டுக்களுக்கு செல்லாது இதனை புரிந்துகொள்ள வேண்டும் எனவும் முன்னிலை சோசலிசக்கட்சியின் பிரதான செயலாளர் குமார் குணரட்னம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மக்கள் பலம் என்பது புத்தகங்களில் இருக்கும் வாக்கியம் அல்ல. இதுவரை காணாத மக்கள் சக்தி ஒன்று செயற்பாட்டுக்கு வந்துள்ளது. இது புத்தகங்களில் இருக்கும் மக்களின் அதிகாரம் சம்பந்தமான வாக்கியமல்ல. மேடைகளில் எழுப்பும் போராட்ட கோஷமுமல்ல.

மக்களின் அதிகாரம் தற்போது செயற்பாட்டுக்கு வந்து பௌதிக சக்தியாக மாறியுள்ளது. மக்களின் இந்த அதிகாரம் மற்றும் பலம் காரணமாக ஜனாதிபதி நாட்டில் இருந்து தப்பியோட நேரிட்டது.

இது அவர் உத்தியோகபூர்வமாக விலகினாரா விலகவில்லையா என்ற விடயமல்ல. அரசியல் ரீதியாக அவர் செல்லுபடியற்றவராகி விட்டார்.

இரண்டரை வருடங்களில் அவருக்கான மக்கள் ஆதரவு இல்லாமல் போயுள்ளது என்பது உறுதியாகியுள்ளது. இது எமது நேரடியான அனுபவத்தின் யதார்த்தம்.

இது நாம் எதிர்பார்த்த ஒன்றல்ல, எமது கோரிக்கையும் அல்ல. இந்த பலம் உயிரோட்டமானது. நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றம் என்ற மூன்று அதிகார தூண்களுக்கு மேலதிக புதிய மக்கள் போராட்டம் அதிகார தூண் 4 ஆவதாக உருவாகியுள்ளது.

இது மக்களின் இறையாண்மை பலம். இந்த பலத்துக்கு பதிலளிக்காது, வளைந்து கொடுக்காது, பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்ற போர்வையில் இதுவரை விளையாடி வந்தனர்.

மக்களின் இறையாண்மை பலம் செயற்பாட்டுக்கு வந்துள்ளது. எனினும் தற்போது மக்களின் இறையாண்மை பலம் நேரடியாக செயற்பாட்டுக்கு வந்துள்ளது. இந்த பலத்தை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

சிலர் இதனைப் புரிந்துகொண்டுள்ளனர். மேலும் சிலர் விருப்பம் இன்றியேனும் இதனை புரிந்துகொண்டுள்ளனர். இதனால், பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் இலக்கங்களை பயன்படுத்த இடமளிக்க வேண்டாம் எனவும் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி கோட்டாவை ஓட ஓட விரட்டுவோம் போராட தயாராகின்றனர் புலம்பெயர் தமிழர்கள்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அழைப்பு

தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிரான போராட்டங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் தயாராகி வருகின்றனர் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டைவிட்டு வெளியேறி மாலைதீவில் தஞ்சமடைந்த இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கிருந்து சிங்கப்பூருக்கு சென்றுள்ளார் எனச் செய்திகள் கூறுகின்றன.

இந்நிலையில் சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில் இனப்படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு அந்நாட்டு நீதிமன்றின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் அந்நாட்டு தூதரகங்கள் முன்னால் போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழர் அமைப்புகளிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை ‘ஓட ஓட விரட்டுவோம்....நீதியின் முன் நிறுத்துவோம்....!’ என்ற முழக்கத்துடன் ஏற்பாடாகி வரும் இந்தப் போராட்டத்தில் அனைத்து தமிழர் அமைப்புக்களையும் ஒருங்கிணையுமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு கோரியுள்ளது.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகள் சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என ஐ.நா. மனித உரிமைச்சபையின் ஆணையாளர் மிச்சேல் பச்சேலேட் அம்மையார் முன்னர் அழைப்பொன்றை விடுத்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# பாசிசவாதியாக செயற்படும் ரணில்!

## ரஞ்சித் மத்தும பண்டார சாடல்

ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதி எனக்கூறிக்கொண்டு நாட்டில் அவசர காலச் சட்டத்தையும் ஊரடங்குச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தி மக்களை அடக்க முயற்சித்து வருகிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

நிராயுத போராட்டக்காரர்களை அடக்க ஆயுதங்களை பயன்படுத்தும் பாதுகாப்பு படையினரை அழைத்த விதத்தை ஐக்கிய மக்கள் சக்தி கண்டிக்கின்றது. ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக சிறந்த மறுசீரமைப்புக்காக அமைதியான முறையில் போராட்டம் நடத்தி வரும் மக்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தி குரல் கொடுக்கும்.

எதிர்க்கட்சி சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் எனத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்த நிலையில், அவை அனைத்தையும் புறந்தள்ளி விட்டு, பிரதமர் பாசிசவாதமாக மக்களை அடக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு துப்பாக்கி, கண்ணீர் புகை குண்டுகளில் மூலம் பதிலளிக்கக் கூடாது. மக்கள் போராட்டத்துக்கு செவி கொடுத்து ஜனநாயக ரீதியாக பிரச்சினை தீர்க்குமாறு பிரதமரை வலியுறுத்துகிறோம் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

# பிரிட்டன் – இந்திய வர்த்தக ஒப்பந்தத்தில் போரிஸ் ஜான்சனின் விலகலால் பாதிப்பு?

ஜூலை 7 அன்று, பிரிட்டிஷ் பிரதம மந்திரி போரிஸ் ஜான்சன் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்கிறார் என அறிவித்தார்.

அவரது அமைச்சரவைக்குள் இருந்து முன்னோடியில்லாத கலகம் ஏற்பட்டமையைத் தொடர்ந்தும், மற்றும் அவரது அரசாங்கத்தை உலுக்கிய தொடர்ச்சியான ஊழல்களின் பின்னணியில் அவரது நெருங்கிய கூட்டாளிகளால் அவர் கைவிடப்பட்ட பிறகு,அவர் இந்த முடிவை அறிவித்தார். இது கட்சிக்குள் தலைவருக்கான – தலைமைக்கான – தேர்தலைத் தூண்டியது.



நாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான (FTA) மேம்பட்ட இந்தியா – இங்கிலாந்து பேச்சுவார்த்தைகளில் பிரிட்டனின் சமீபத்திய – இந்த – அரசியல் முன்னேற்றங்களின் தாக்கம் குறித்து உடனடி அறிகுறிகள் எதுவும் இல்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தையை ஜனவரியில் இரு நாடுகளும் முறையாகத் தொடங்கியிருந்தன.

அத்தகைய ஒப்பந்தங்களில், இரு நாடுகளும் தங்களுக்கு இடையே வர்த்தகம் செய்யப்படும் அதிகபட்ச எண்ணிக்கையிலான பொருள்களின் மீதான சுங்க வரிகளை நீக்குகின்றன அல்லது கணிசமாகக் குறைக்கின்றன, முதலீடுகள் மற்றும் சேவைகள் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான விதிமுறைகளைத் தளர்த்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



ஏப்ரல் மாதம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது இங்கிலாந்துப் பங்காளியான பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர், சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை முடிக்க பேச்சுவார்த்தை குழுக்களுக்கு தீபாவளிக்கு காலக்கெடுவை நிர்ணயித்துள்ளனர். தீபாவளி இந்த ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி வருகிறது.

பிரிட்டனும் இந்தியாவில் ஒரு முக்கிய முதலீட்டாளராக உள்ளது. புதுடில்லி 2021 – 22இல் 1.64 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்துள்ளது. ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2022 வரை இந்த எண்ணிக்கை சுமார் 32 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தையை ஜனவரியில் இரு நாடுகளும் முறையாகத் தொடங்கின.

அத்தகைய ஒப்பந்தங்களில், இரு நாடுகளும் தங்களுக்கு இடையே வர்த்தகம் செய்யப்படும் அதிகபட்ச எண்ணிக்கையிலான பொருள்களின் மீதான சுங்க வரிகளை நீக்குகின்றன அல்லது கணிசமாகக் குறைக்கின்றன, முதலீடுகள் மற்றும் சேவைகள் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான விதிமுறைகளைத் தளர்த்துகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

இங்கிலாந்தில் இந்த அரசியல் போக்குகள் மிக சமீபத்தில் நடந்தவை....நடந்துகொண்டிருக்கும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையில் இந்த ராஜினாமா விவகாரத்தால் எந்த விளைவும் ஏற்படுவது குறித்து எங்களுக்கு எந்த அறிகுறியும் கிடைக்கவில்லை. கொன்சர்வேடிவ் கட்சி இன்னும் அரசாங்கத்தில் இருக்கப் போகிறது என்பதால், உடனடியாக எதையும் நாங்கள் காணவில்லை. இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையேயான வலுவான இருதரப்பு கூட்டாண்மையை பாதிக்கும் எந்த காரணத்தையும் நாங்கள் கேள்விப்பட்டதில்லை, என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்

இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் மேம்பட்ட நிலையில் இருக்கின்றன எனவும், முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தின் பல அத்தியாயங்களில் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

ஏற்றுமதியை அதிகரிக்கும் அதேவேளை இந்தியா முழுவதும் ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஒரு நல்ல, நியாயமான மற்றும் சமமான வர்த்தக ஒப்பந்தத்தைப் பெறுவதே முன்னுரிமை என்று அந்த அதிகாரி கூறினார்.

பேச்சுவார்த்தையை முடிப்பதற்கான காலக்கெடுவை சந்திப்பது பற்றி கேட்டபோது, அதிகாரி கூறினார்: சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் மிகவும் சிக்கலான பகுதி மற்றும் அவை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பல்வேறு கூறுகளைக் கவனமாக மதிப்பீடு செய்வதை உள்ளடக்கியது. மேலும் நாங்கள் அதை இரு தரப்பிலும் சரியான ஆர்வத்துடன் தொடர்ந்து செய்வோம். இந்த சவாலான காலக்கெடுவை சந்திக்க எங்களின் சிறந்த முயற்சி.

ஏப்ரல் மாதம், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர், சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை முடிக்க பேச்சுவார்த்தை குழுக்களுக்கு தீபாவளியைக் காலக்கெடுவாக நிர்ணயித்துள்ளனர். தீபாவளி இந்த ஆண்டு அக்டோபர் 24 ஆம் திகதி வருகிறது.

ஆயத்த ஆடைகள் மற்றும் ஜவுளிகள், ரத்தினங்கள் மற்றும் நகைகள், பொறியியல் பொருள்கள், பெட்ரோலியம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் பொருள்கள், போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் பாகங்கள், மசாலா பொருள்கள், உலோக பொருள்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள், மருந்து மற்றும் கடல் பொருள்கள் ஆகியவை இங்கிலாந்திற்கு இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிகளில் அடங்கும்.

முக்கிய இறக்குமதிகளில் விலைமதிப்பற்ற மற்றும் அரைகுறையான கற்கள், தாதுக்கள் மற்றும் உலோக கழிவுகள், பொறியியல் பொருள்கள், தொழில்முறை கருவிகள், இரும்பு அல்லாத உலோகங்கள், இரசாயனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவை அடங்கும்.

சேவைத் துறையில், இந்தியத் தொழில் நுட்பத் துறைசேவைகளுக்கான ஐரோப்பாவின் மிகப்பெரிய சந்தைகளில் இங்கிலாந்து ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**(மூலம்: த எக்கனமிஸ்ட் ரைம்ஸ்)**



# ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற போராட்டக்காரர்கள் முயற்சியாம்!

## பதில் ஜனாதிபதி ரணில் கூறுகிறார்



போராட்டத்தின் ஊடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற போராட்டக்காரர்கள் முயற்சி செய்கின்றனர் என தெரிவித்துள்ள பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாரம்பரிய அரசியல் தரப்பினர் போராட்டக்காரர்களுடன் கைகோர்த்துள்ளமை கவலைக்குரியது எனக் குறிப்பிட்டார்.

விசேட காணொலியொன்றை வெளியிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் முப்படைகளின் தலைமையகத்தையும், நாடாளுமன்றத்தையும் முற்று கையிட திட்டமிட்டதை தடுக்கும் வகையிலும்,பொது அமைதியை பேணும் நோக்கத்திலும் அவரச கால சட்டமும் ,ஊரடங்கு சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் நெருக் கடிகளைத் தீவிரப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது என பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## 09ஆம் திகதி ரயில் சேவைகள் இரத்தானமை ஏன்? மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

முன்னறிவித்தலின்றிய வகையில் கடந்த 09 ஆம் திகதி காலை ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தி னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்தன குறிப்பிடுகையில்-

பொது போக்குவரத்து சேவை பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் கடந்த 8 ஆம் திகதி இரவு 09 மணி முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் மேல்மாகாணத்தில் பொலிஸ் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாடு தழுவிய ரீதியில் ரயில் சேவை முழுமையாக இடைநிறுத்த அதிகாரிகள் தீர்மானித்தனர்.

ரயில் சேவை இடைநிறுத்தம் தொடர்பில் ரயில்வேத் திணைக்களத் தின் பொது முகாமையாளர் எவ்வித ஆலோசனைகளையும் உரிய தரப்பி னருக்கு வழங்கவில்லை.

ரயில் சேவை இடைநிறுத்தப் பட்டதால் 9 ஆம் திகதி காலை காலி, அநுராதபுரம், கண்டி, மாத்தறை மற்றும் அவிசாவளை ஆகிய ரயில்நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும், பொது பயணிகளுக்குமிடையில் முரண்பாடான தன்மை நிலவியது. ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் உரிமையைப் பாதிக்கும் வகையில் ரயில்வேத் திணைக் களம் செயற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வலி யுறுத்தியுள்ளோம். - என்றார்.

## கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தின் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் பலி!

கண்ணீர்ப் புகைப்பிரயோகத்தின் பின்னர் தனியார் வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்றுவந்த போராட்டக்காரர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிளவர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகத்துக்கு அருகில் நடத்தப்பட்ட கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தில் பாதிக்கப்பட்ட அவர், மூச்சு திணறல் காரணமாக உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## நாட்டுக்குள் நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துமாறு பெரமுன கோரிக்கை!

உடனடியாக நாட்டுக்குள் நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய பதில் ஜனாதி பதி பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் பாதுகாப்பு தரப் பினர் இதற்குரிய நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

மேலும் அதற்காக பொது ஜன பெரமுன முழு ஒத்து ழைப்பையும் வழங்கும் எனவும் தெரிவித்துள்ளது.

## பிரிவினையை ஏற்படுத்தாது கூட்டிணைவோடு செயற்படுக!

### கட்சித் தலைவர்களிடம் பவ்ரல் கோரிக்கை

நாட்டின் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் பவ்ரல் அமைப்பு முக்கிய வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருப்பவை வருமாறு –

பிரிவினையை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் கூட்டு இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி மற் றும் பிரதமர்களை தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கொழும்பில் பிரதமர் அலுவலகத்தை பல்லாயிரக் கணக்கான போராட்டக்காரர்கள் இணைந்து முற்றுகைப் போராட்டம் மேற்கொண்டனர்.

அதன் போது போராட்டக்காரர்களை விரட்டியடிப்பதற்காக ஆயுதம் தாங்கிய படையினரும் பொலிஸாரும் பெருமள வில் குவிக்கப்பட்டு போராட்டக்காரர் மீது துப்பாக்கி பிரயோகம், நீர்த்தாரை பிரயோ கம் மற்றும் கண்ணீர் புகை தாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

அதனையடுத்து போராட்டக்காரர்களுக்கும் படையினர் மற்றும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் தீவிரமடைந்தது. இதனையடுத்து பொலி ஸாரின் தடுப்புக்களையும் மீறி போராட் டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்தைக் கைப்பற்றினர்.

இவ்வாறு இடம்பெற்ற மோதல் சம்பவத் தின் போது கண்ணீர்ப் புகை தாக்குதலுக் குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையிலேயே பவ்ரல் அமைப்பு இவ்வாறான கோரிக்கையை முன் வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

## மஹிந்த, பஸில் நாட்டை விட்டு வெளியேறமாட்டார்கள் அவர்களின் சட்டத்தரணி நீதிமன்றுக்கு உத்தரவாதம்!

மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் ஆகியோர் இன்று வரை நாட்டை விட்டு வெளியேற மாட்டார்கள் என நீதிமன்றத் துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, பஸில் ராஜபக்ஷ மற்றும் எஸ்.ஆர். ஆட்டிகல உள்ளிட்டோருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று உயர்நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

மேற்படி மூவரையும் பிரதிநிதித்துவப் படுத்தி உயர் நீதிமன்றத்தில் முன்னிலை யான சட்டத்தரணிகள் இதனை நீதிமன் றுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், குறித்த மனுக்கள் மீதான மேலதிக விசாரணைகள் இன்று இடம் பெறவுள்ளன என நீதிமன்றம் அறிவித்துள் ளது.



## தமிழீழ விடுதலைப் புலிகளை பிளந்த ரணிலுக்கு இது பெரிய காரியமல்ல!

### காலி போராட்டக்காரர்கள் பகிரங்க கருத்து

'தமிழீழ விடுதலைப் புலிகளை' பிளந்த ரணிலுக்கு இந்த போராட் டத்தையும் பிளப்பது சுலபம் என போராட்டத்தில் கலந்து கொண் டிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

கோட்டா கோ கம போராட் டக்காரர்களால் நாடாளு மன்றம் முற்றுகையிடப்பட்டு கைப்பற்றும் முயற்சி இடம்பெற்றது. இதன் போதே காலி முகத்திடல் போராட் டக்காரர்கள் இவ்வாறு தெரிவித் துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில் -

நாட்டில் பாரிய ஆர்ப்பாட் டங்கள் இடம்பெற்றிருந்த நிலையில் புதன் இரவு நாடாளு மன்றத்தைக் கைப்பற்றுவதற் கான நடவடிக்கையும் முன்னெ டுக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக நாடாளுமன்றத்தை கைப்பற்றும் முயற்சி முறிய டிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் புதன் இரவு காலிமுகத்திடல் பகுதியில் இருந்து கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் நாட்டு மக்களுக்கு முக்கிய அறிவுறுத்த லொன்றை வழங்கியுள்ளனர்.

அத்துடன் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற ஆர்ப் பாட்டங்களில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் பங்கேற்க வில்லை எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. அத்துடன் இந்த நாடாளுமன்ற முற்றுகை போராட்டம் தொடர்பில் கேள்விப்பட்டதும் அதில் பொது மக்களைக் கலந்து கொள்ள வேண்டாமென கேட்டுக் கொண் டதாகவும் அவர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர். அதேவேளை நாடா ளுமன்றை முற்றுகையிட்டிருந்த போராட்டக்காரர்களுக்கு அறி வுறுத்தலையும் வழங்கியுள்ளனர்.

அதாவது, ஏற்கனவே போராட் டக்காரர்கள், ஆக்கிரமிக்க வேண் டிய ஜனாதிபதி மற்றும் பிரதமர் செயலகங்களை ஆக்கிரமித்து விட்டோம்.நாடாளுமன்றத்தையும் ஆக்கிரமித்து, அரசமைப்பு மூல மாக எமக்கு தீர்வு தரும் கடைசி அமைப்பையும் அழிக்க வேண் டாம் எனக் கோரியுள்ளனர்.

அதிபர் மற்றும் பிரதமர் செயலகங்களை ஆக்கிரமித்த வேளைகளில் ஓர் உயிர் சேதமும் ஏற்படவில்லை. அவ்வேளைகளில் இராணுவம் சுடவில்லை. ஆனால், இப்போது சுடலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், பெதும் கேர்னர் என்றநபர் காலிமுக போராட்டத்தில் நுழைந்து 'நாடாளுமன்றத்தை பிடி'என்றதவறானவழிகாட்டலைத் தருகிறார். இதன்மூலம் போராட் டத்தில் பிளவு வருகிறது. மேலும், நாடாளுமன்றத்தில், சபாநாயகர் இல்லத்தில், கை வைத்தால் சர்வதேசம் எம்மை நிராகரிக்கும்.

ஏற்கனவே எமக்கு ஆதரவாக இருந்த சட்டத்தரணிகள் சங்கமும் இப்போது எம்மை விமர்சிக்கிறது எனத் தெரிவித்துள்ளனர்.

# குணரத்தினம் என்ன கூறுகிறார்?

## அக்கரை அக்கறை அலசல்



**என்.சத்தியமூர்த்தி**

நாடு இருக்கும் நிலையில், இந்த வாரமும் பெற்றோல், டீசல் தட்டுப்பாடு நிலவுகிறது என்றால், அதற்கு எதிர்கட்சிகளும் ஒரு காரணம். ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, காணாமல் போனதில் துவங்கி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தன கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், பெற்றோல் இறக்குமதிக்கான அந்நிய செலாவணியைச் செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் முன்வைத்த கோரிக்கையை எதிர்க்கட்சிகள் நிராகரித்ததே இதற்கு காரணம்.

இதில் நகைப்பிற்குரிய விடயம் என்னவென்றால், எதிர்கட்சிகள் தங்களது எதிர்ப்பிற்குக் கூறிய காரணம்தான். அமைச்சரவை அனுமதிக்காத செலவினங்களை செய்வதற்கு குறிப்பிட்ட அமைச்சிற்கு, அரசியல் யாப்பின் கீழ் அனுமதி இல்லை என்று தர்க்கித்தவர்களில் சுமந்திரனும் ரவூப் ஹக்கீமும் அடக்கம் என்று செய்திகள் கூறின. ஆனால், இதற்கு காரணமான அரசு மற்றும் அரசியல் மாற்றம் அனைத்துமே யாப்பு மற்றும் நாடாளுமன்ற ஜனநாயக முறைப்படி அரங்கேறாத நிலையில், மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் இந்த ஒரு முடிவிற்கு மட்டும் அரச செய்முறை பின்பற்றப்பட வேண்டும் என்று நிர்பந்தித்தது, அரங்கேறிய கேலிகூத்தின் உச்சம்.

என்ன, எங்கே, கடந்த பல நாள்களாகக் கண்ணில் தட்டுப்படாத பெற்றோல் மக்களுக்கு கிடைத்து விட்டால், கோட்டா – ரணில் தலைமை தொடர்ந்து விடுமோ, என்ற பயம் அவர்களில் சிலருக்கு இருந்திருக்கலாம். இந்த கடுமையான பொருளாதாரப் பிரச்சனை மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில், அவர்களது அரசியல் கவலை, அவர்களுக்கு!

### மக்கள் புரட்சி

இதற்கு இடையில், கொழும்பு காலிமுகத்திடல்துவங்கிதென்னிலங்கையின் பல பாகங்களிலும் அரங்கேறிய மக்கள் புரட்சிக்கு, முன்னிலை சோலிச கட்சியின் தலைவர் பிரேமகுமார் குணரத்தினம் பொறுப்பேற்று கொண்டுள்ளார். உண்மையில், அது ஒரு மக்கள் புரட்சிதான். தனியாக எந்தவொரு தலைவரோ, கட்சியோ அதற்கு உரிமை கோர முடியாது. ஆனால், குணரத்தினம் கூறுவது போல், அவரது கட்சிக்கும் அவரது தாய் அமைப்பான ஜே.வி.பி. என்று அறியப்படும் மக்கள் விடுதலை முன்னணிக்கும், போராட்டத்திலும் அதன் வெற்றியிலும் முக்கிய பங்கு இருக்கிறது என்பதும் உண்மையே.

அதே சமயம், கடந்த சனிக்கிழமை மாலை அரங்கேறிய பிரதமர் ரணிலின் சொந்த வீடு தீவைப்பு சம்பவத்திற்கு சோலிச கட்சி பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. அது போன்றே, கடந்த மே மாதம் 9 ஆம் திகதி மாலையில், தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளில் ஆளும் கட்சி தலைவர்கள் 78 பேரின் வீடுகள் மற்றும் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்திற்கும் யாரும் இது வரை பொறுப்பேற்கவில்லை.

இதில், மிகவும் வருத்தப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், உள் நாட்டில் எந்தவொரு அரசியல் கட்சியோ அதன் தலைவர்களோ, இத்தகைய வன்முறை சம்பவங்களை இது வரையிலும் கண்டிக்கவில்லை. இதுவே, கொழும்புவில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் பொருந்தும். அதே சமயம், அன்று முற்பகல், மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ராஜினாமா செய்த பிறகு. அவரது ஆதரவாளர்கள் என்று கூறிக் கொண்ட அடியாள்கள், அமைதியான போராட்டக்காரர்களை தாக்கியதை கண்டிக்க இவர்களில் எவருமே தவறவில்லை. அதுவும் கண்டிக்கத்தக்க விடயமே.

மே 9 ஆம் திகதி பகல் நேர சம்பவங்கள் அரங்கேறி இருக்கவில்லை என்றால், மாலையில் தீ வைப்பு சம்பவங்கள் நிகழ்ந்து இராது என்று கூறுவோர் உள்ளனர். இது ஒரு பாதியே உண்மை. அன்று இல்லை என்றாலும், போராட்டக்காரர்களில் போர் குணம் உடையோர் இந்த இலக்குகளை முன்னரே குறி வைத்து விட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. இல்லை என்றால், தென்னிலங்கையின் வேறு வேறு பகுதிகளில், தனித் தனியாக போராளி குழுக்கள், சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்குள் இவ்வாறான வன்முறையை அரங்கேற்றி இருக்க முடியாது.

### இடதுசாரி சித்தாந்தம்

அண்மையில் யாழ்பாணம் விஜயம் செய்த குணரத்தினம், பின்னர், சில தமிழ்க் கட்சிகள் ஒழுங்கு செய்திருந்த காணொலி மூலம் கருத்து பரிமாற்றம் செய்தார். முன்னதாக, கொழும்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன் மற்றும் சாணக்கியனை அவர் சென்று சந்தித்தார் எனச் செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலையில் பிறந்த அவர் தனது பேச்சு தமிழை இன்னமும் மறக்கவில்லை. சிங்களவர்கள் மத்தியிலும், பின்னர் ஆஸ்திரேலியாவில் கன காலமும் கழித்த அவரால், தனது இடதுசாரி சித்தாந்தங்களை தெளிவாக தமிழில் கூற முடிந்தமை வரவேற்கத்தக்கது. ஆனால், அரசியல் சித்தாந்தங்களுக்கு அப்பால், தமிழ்த் தேசியம் மட்டுமே படித்து, குடித்து வளர்ந்த தமிழ் இளைய சமுதாயத்தால், அவர் கூறிய அனைத்தையும் முழுமையாக கிரகிக்க முடிந்ததா என்பது பொறுத்திருந்து அறிந்து கொள்ளப்பட வேண்டிய விடயம்.

குணரத்தினத்தின் இவ்வாறான முன்னெடுப்புகளை தொடர்ந்தும், அவரது தென்னிலங்கை வெற்றிகளை தொடர்ந்தும், இடதுசாரி சித்தந்தத்தை ஆதரிக்கும் சில் தமிழர் கட்சிகள் அவருடன் கை கோர்த்தால் ஆச்சரியப்பட தேவையில்லை. அதுவே தேர்தல் கூட்டணியாக உருவெடுத்து, முன்னிலை சோசலிச கட்சி தமிழர் பகுதியில் முளை விட்டால் அதுவும் எதிர்பார்க்கப்பட வேண்டிய விடயம் தான்.

### மக்கள் புரட்சி

தனது அண்மைகால பேச்சுகள் மூலம் குணரத்தினம் முக்கியமாக கூறும் விடயங்களை கூர்மையாக நோக்க வேண்டும். அரசியல் யாப்பு, நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற நாட்டின் அடிப்படை அரசியல் பாதையை விட்டு விலகி, மக்கள் புரட்சி என்ற ஒரே ஆயதத்தால் ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்து விட்டோம் என்று அவர் கூறுவது உண்மை. ஆனால், அதுவே எதிர்கால கொள்கை மாற்றங்களுக்குமான பாதை என்று அவர் கூறுவது ஏற்புடையதா?

அவரது கூற்றின்படி, மாற்று அரசு மற்றும் அந்த அரசின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளும் இவ்வாறே மக்கள் கூடி பேசி, அவர்களது முடிவுகளை நாடாளுமன்றம் (போன்ற ஒரு அமைப்பு?) முன்னெடுத்து சென்று, அரசு செயல்படுத்த வேண்டும். இது தற்போதைய சூழலில் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும் செயலளவில் நடைமுறை சாத்தியம் இல்லாதது.

அதாவது, கிராமம் மற்றும் நகர அளவில் மக்கள் சபைகளை அமைத்து, அவற்றில் விவாதம் செய்து எடுக்கும் முடிவுகளை, தேசிய அளவில் ஒரு முதன்மை குழு சரி பார்த்து, அவை செயல்படுத்தப்படும். இதுவே, பல்வேறு கம்யூனிஸ்ட் நாடுகளில் பழக்கம். ஆனால், அங்கும் கூட பல்வேறு விடயங்களில், தலைமை சொல்வதையே, கீழே உள்ள கட்சி மற்றும் ஆட்சி அமைப்புகள் செயல்படுத்தி வந்துள்ளன.

இலங்கைக்கு முன்னர், கடந்த சில – பல ஆண்டுகளில் சில எகிப்து, துனிசியா, லிபியா போன்ற மேற்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளில் மக்கள் புரட்சி என்ற பெயரில் ஆட்சி மாற்றம் காணப்பட்டது. அவற்றில் சிலவற்றில் வன்முறை பயந்த அளவிற்கு வெடிக்கவில்லை. ஆனால், லிபியாவில் சர்வாதிகாரி கடாஃபியை கொன்று விட்டு அவரது உடலை தெருத் தெருவாக இழுத்துச் சென்று அவரது மரணத்தையும் கேலி செய்ததை உலகம் மறந்துவிடவில்லை.

இவற்றிற்கு அப்பால் சென்று, இத்தகைய கொள்கை மற்றும் இது போன்ற அமைப்புகள் முழுமையாக வெற்றி பெற்று விட்டன என்றால், சோவியத் யூனியன் ஏன் காணாமலே போய்விட்டது? சீனாவும், மேற்குலகின் சந்தை பொருளாதாரத்தை அரவணைத்த பிறகே வெற்றி பெற்றது.

அதற்காக, இன்றைய இலங்கையின் நிலையில், மக்கள் சார்ந்த சோலிச சித்தாந்தம் தவறு என்றல்ல பொருள். மாறாக, உலகின் தற்போதைய நிலையில், நாட்டில் எத்தகைய பொருளாதார கொள்கை பயன்படும் என்பதை அனைவரும் ஆராயந்து அறிந்து செயல்படுத்த வேண்டும். தன்னிச்சையாக யாரும் எந்தவொரு முடிவையும் எடுத்து விட்டு, அதனை மக்களின் முடிவு என்று நாட்டின் மீது திணிப்பது மீண்டும் எதிர்வினை முடிவுகளையே விளைவிக்கும்.

இதற்காக அமைந்தது தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் நகர மற்றும் கிராம சபைகள். அவற்றை எல்லாம் ஒழித்துவிட்டு, புதிதாக எதேச்சாதிகாரமாக மக்கள் குழுக்களைப் பல்வேறு நிலைகளில் தோற்றுவிக்க வேண்டும் என்ற குணரத்தினத்தின் திட்டமும் நாடு மேலும் மேலும் தவறிழப்பதற்கே வழி செய்யும்.

அது போன்றே தற்போதைய கொள்கைகளும் ஆட்சியாளர்களும் தோல்வி அடைந்து விட்டார்கள் என்ற ஒரே காராணத்திற்காக, கண்ணில் தெரியும் எந்தவொரு திட்டத்தையும் நாடு அரவணைத்துக் கொள்ளவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவ்வாறான கட்டாயம் இருக்கவும் கூடாது.

### இனப்பிரச்சனை

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினையை அளவுகோலாக வைத்து மட்டுமே, தேசிய அளவிலான பெரும்பாலான அரசியல் முடிவுகளை எடுத்து வந்திருக்கிறார்கள். இதற்கும் விதி விலக்கு உண்டு.

உதாரணத்திற்கு இனப்போர் முடிந்து, 2010 தேர்தலில், ஜனாதிபதி மஹிந்தாவிற்கு எதிராக, போர்கால இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை தமிழர்கள் ஆதரித்து வாக்களித்தமை இன்னமும் புரிந்து கொள்ளாத புதிர். அன்று துவங்கி இன்று வரை போர் குற்றங்கள் என்று தமிழர் தரப்பும் அவர்களை ஆதரிக்கும் சர்வதேச சமூகமும் குற்றம்சாட்டுவது இலங்கை இராணுவத்தையே. ஆனால், இராணுவத்தின் போர்கால தளபதியை தமிழ் வாக்காளர்கள் தேர்தலில் ஆதரித்தது, இன்றளவும் புரியாத புதிர்.



இந்த பின்னணியில், குமார் குணரத்தினம், இனப்பிரச்சினை குறித்து தமிழருக்கு எதிர்ப்பில்லாத நிலையை எடுத்து, அது குறித்து பேசி வருகிறார். அதனை தமிழர் ஆதரவு நிலைமை என்று கூறுவோரும் உள்ளனர். குணாவோ, இனப்பிரச்சனை குறித்த தங்களது நிலைபாட்டிற்கு விளக்கமான செயல்திட்டம், இது போன்ற பிற கொள்கை முடிவுகளோடு, மக்கள் சபைகளே எடுக்கும் என்று விளக்கம் கூறி உள்ளார்.

குணரத்தினத்தின் கூற்றுப்படி, அவர் கூறும் மக்கள் சபை, அவர் சொற்படி நடக்கும் என்ற எண்ணத்திலேயே தனது கருத்தை பதிவிட்டுள்ளார். ஆனால், தென்னிலங்கையில், தற்போதைய அரசியல் தலைமைகளுக்கும் அப்பால், பெரும்பாலான மக்கள் பேரினவாதத்தில் சிக்குண்டுள்ளார்கள் என்பதே உண்மை. அரசியல் மாற்றத்திற்கான தற்போதைய போராட்டம் ஏதோ ஒரு விதத்தில் முடிந்த பிறகு, பேரினவாதிகள், இனப்பிரச்சினையில் தமிழர் ஆதரவு நிலைமை எடுப்பார்கள் என்று என்ன நிச்சயம்?

இது குணரத்தினத்தின் ஆதரவு நிலைமையை கேள்வி கேட்பது அல்ல. காரணம், அவர் தவிர, போராட்ட தலைமைகளில் நகர்புற மத்தியவர்க்கத்தினர் மட்டுமே, தெளிவாக, அதே சமயம் தங்களது வழமையான தமிழர் ஆதரவு நிலைமைக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளனர். அதே சமயம், குணரத்தினம் கூறியது போல், இனப்பிரச்சினை குறித்து புதிய கருத்துக்களை, தென்னிலங்கையின் அடிமட்டத்திலும் சென்றடைய செய்தாலே பேரினவாதிகளிடம் மனமாற்றம் ஏற்படலாம்.

### கருத்தியல் பிரச்சினை

இந்த கருத்து புதியதல்ல என்றாலும், அதனை போராட்ட குழவின் முக்கிய தலைவர் கூறுவதை கருத்தில் கொள்ள வேண்டும். அந்த வகையில், தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறுபட்ட தமிழ் சமூக – அரசியல் தலைமைகள், இது குறித்து எந்தவொரு முடிவும் எடுக்காமலே, இனப்போருக்கு பின்னரான இந்த பதிமூன்று வருடங்களையும் பாழடித்து விட்டார்கள்.

தமிழர் தரப்பை பொறுத்தவரையில், தென்னிலங்கை அரசியல்வாதிகள் எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் பேரினவாதிகளே. முன்னர் ரணிலை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடியவர்கள், தற்போது சஜித் பிரேமதாஸ்விற்குக் காவடி தூக்குகிறார்கள். அதுவும் மாறும் காலம் வரும். ஆனால், தமிழர் தரப்பில் ஒருவர் கூட, ஒரு சமூக – அரசியல் தலைமை கூட, தென்னிலங்கை அரசியல்வாதிகளை தூக்கி எறிந்து விட்டு, அந்த மக்களை நேரடியாக சந்தித்து பேசி, அவர்களிடம் உண்மை நிலைமையை எடுத்துரைத்ததாக சரித்திரமே இல்லை.

எப்படி தென்னிலங்கை தலைமைகளுக்கு பேரினவாதம் முக்கிய பேசு பொருளோ, தமிழர் தலைவர்களுக்கும் இனப்பிரச்சினையும் பேரினவாதமும் அதைவிட முக்கியமான கருத்தியல் பிரச்சினை. அதற்கு முடிவு கிடைத்து விட்டால், அவர்கள் (அரசியல்வாதிகள்) அடுத்தது என்னதான் செய்வார்கள்?

# கோட்டா மாலைதீவு சொகுசு விடுதியில் செலவிட்டுள்ள பெருந்தொகைப் பணம்!

## இந்திய ஆங்கில ஊடகம் தகவல்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவிற்கு தப்பிச்சென்ற நிலையில், அந்நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள சொகுசு விடுதியில் தங்கியிருக்க பெருந் தொகை பணத்தைச் செலவிட்டுள்ளார் என இந்திய ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வெளியேறியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் புதன்கிழமை அதிகாலை மாலைதீவை சென்றடைந்தார்.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ மாலை தீவிற்கு சென்றடைந்த போது அங்குள்ள இலங்கை யர்கள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கடும் அழுத்தத் தைப் பிரயோகித்திருந்தனர்.

இதனை தொடர்ந்து மாலைதீவில் உள்ள தென் பகுதியில் அமைந்துள்ள சொகுசு விடுதியில் தங்கியி ருந்தார் எனவும், அங்கு ஓர் இரவு தங்குவதற்கு இலங் கையின் பணம் சுமார் 18 லட்சம் ரூபா செலவிட்டுள்ள தாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறான நிலையில், மாலைதீவை விட்டு வெளி யேற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாலைத்தீவு அரசாங்கத்திடம் தனியார் ஜெட் விமானம் ஒன்றை ஏற் பாடு செய்யுமாறு கோரிக்கை விடுத்துத்தார் என வும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# சட்டவாட்சியை உறுதிப்படுத்துக அமெரிக்கா வலியுறுத்துகின்றது!

நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துமாறு அமெ ரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து வகையான வன்முறைகளையும் கண் டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத் தன்மைக்காக அனைத்து தரப்பினரும் விரைந்து செயற் பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஜனநாயக நிர்வாகம் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான மக்களின் கோரிக்கைகளை ஜனநாயக மற்றும் அரசமைப்பு கட்ட மைப்பிற்குள் அமைதியான அதிகாரப் பரிமாற்றத்தின் மூலம் மாத்திரமே அடைய முடியும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரி - 56 துப்பாக்கி மற்றும் 60 தோட்டாக்கள் போராட்டக்காரர்களால் அபகரிக்கப்பட்டன!

பத்தரமுல்ல - பொல்துவ சந்திக்கு அருகில் கடந்த புதன்கிழமை இரவு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாது காப்பு படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோத லில் இராணுவ சிப்பாய் ஒருவரும் பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதில், தாக்குதலில் படுகாயமடைந்த பொலிஸ் உத் தியோகத்தர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஆர்ப்பாட்டக்காரர்களில் ஓர் இராணுவ சிப்பாய் கடுமையாக தாக்கப்பட்டார் எனவும், அவரது ரி - 56 துப்பாக்கி மற்றும் 60 தோட்டாக்களும் போராட் டக்காரர்களால் அபகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

# டீசலை ஏற்றிய கப்பலொன்று இன்று நாட்டை வந்தடைவு!

டீசலை ஏற்றிய கப்பலொன்று இன்று (வெள்ளிக் கிழமை) நாட்டை வந்தடையவுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலை வர் உவைஸ் மொஹமட் இந்த விடயத்தைத் தெரிவித்துள் ளார்.

நாட்டை வந்தடையவுள்ள மேற்படி கப்பலில் 40 ஆயி ரம் மெற்றிக் தொன் டீசல் கொண்டு வரப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பெற்றோல் மற்றும் டீசல் ஏற்றிய மேலும் சில கப்பல் கள் அடுத்த வாரம் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 'டீல் அரசியல்' நடத்தாமல் ரணில் உடனடியாக பதவி விலகவேண்டும்

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து



நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக் கடிகளைக் கருத்தில் கொண்டு மேலும் நாட்டை நெருக்கடி நிலைக்குத் தள்ளி விடாமல் ரணில் உடனடியாக பதவி விலகி சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு இடமளிக்க வேண்டும். மேலும் வேட்புமனுவுக்கு அழைப்பு விடுத்து புதிய ஜனாதி பதி ஒருவரை தெரிவு செய்யுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரி விக்கையில் –

நாட்டு மக்கள் விரும்பும், கோரிக்கை மற்றும் நாட்டின் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பெரும்பான்மையாக ஏற்றுக்கொண்ட தீர்மா னங்களுக்கு அமைவாக தற்போது நாம் செயற் பட வேண்டும்.

அதைவிடுத்து தற்போது ஜனாதிபதி விலகிய பின்னர் பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்பார் என்பதை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

அவர்கள் கோரிக்கை விடுப்பது கோட்டா – ரணில் இருவரும் பதவி விலக வேண்டும்.

அதற்கமைவாக, திகதி குறிப்பிடப்பட்டு நாடா ளுமன்றத்தில் வாக்கெடுப்பு மூலம் புதிய ஜனாதி பதி தெரிவு செய்யலாம்.

ஆனால் அரசாங்கத்தினர் இராணுவத்தை மற்றும் அவர்களின் துப்பாக்கியைக் கொண்டு மக்களின் கோரிக்கைகளையும் அபிலாஷை களையும் இல்லாது செய்யப் பார்க்கிறார்கள்.

தற்போது பிரதமர் ரணில் பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று நாட்டை மேலும் மோசமான நிலைக்கு தள்ளுவதற்கு முயற்சிக்கிறார்.

நாம் முப்படைகளுக்கும் கோரிக்கை விடுக் கிறோம். துப்பாக்கி மூலம் போராட்டக்காரர்கள் அடக் குவதற்கு முயற்ச்சிக்க வேண்டாம். அவர்களைச் சுடுவதற்கு அல்லது தாக்குதல் நடத்துவதற்கு முப்படையினருக்கு அதிகாரம் இல்லை.

பிரதமர் ரணில் நாட்டில் நிலவும் மிக நெருக் கடி நிலையை கருத்தில் கொண்டு மேலும் இந் நிலையைஉக்கிரமடையசெய்யாமல்உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

மேலும் நாட்டு மக்கள் கோரும் சர்வகட்சி அர சாங்கத்தை அமைப்பதற்கு இடமளிக்க வேண்டும். 'டீல் அரசியல்' நடத்துவதற்கு இது பொருத்த மான நேரமல்ல. நாம் அனைவரும் இலங்கை யர்கள் என்ற ரீதியில் செயல்பட வேண்டும்.

இந்நிலையில், நாட்டில் சர்வதேச நாணய நிதி யம், சர்வதேச நாடுகள், மற்றும் கடன் வழங்குந ருடனும் பல முக்கியமான பேச்சுகள் இடம்பெற்று வருகின்ற தருணத்தில் நாட்டில் தற்போது அரசி யல் குழப்பங்கள் காரணமாக ஜனநாயக மீறப் படுமானால் அவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக் காமல் போகும்.

அதன் காரணமாக நாடும் மேலும் மோசமான நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படும். இதை கவ னத்தில் கொண்டு உடனடியாக பதவி விலகுமாறு கோரிக்கை விடுக்கிறோம். – என்றார்.

# இந்த வருடம் இதுவரையான விபத்துகளில் 1,459 பேர் பலி!

2022 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் இடம் பெற்ற வீதி விபத்துகள் காரணமாக 1,459 பேர் உயிரிழந் துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள் ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த விபத்துக்கள் பதி வாகியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 1,387 பாரிய வீதி விபத்துக்களில் 1,459 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துகளில் 3 ஆயி ரத்து 326 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில் 4 ஆயிரத்து 309 சிறு விபத் துகளும், 2 ஆயிரத்து 229 விபத்துக்களில் சொத்துக்க ளுக்கான சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த நாள்களில் திடீரென வீதிக ளில் வாகனங்களின் எண்ணிக்கை குறைந்ததால் விபத் துக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யானை தாக்கி ஒருவர் சாவு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நெடியமடு கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் பலியாகியுள்ளார் என ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயித்தியமலையில் வசித்து வரும் கோயில்போரதீவைச் சேர்ந்த 54 வயதுடைய மு. விசயராசா என்பவரே இவ்விபத்தில் பலியாகியுள்ளார்.

நெடியமடு வைத்தியசாலைக்கு முன்னால் பிரதான வீதி யில் நின்ற காட்டு யானை தாக்கியமையாலேயே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஆயித்தி யமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் பலியாகியதுடன், அதற்கு முன்னர் சில வாரங்களுக்கு முன் அடைச்சகல் பகுதியில் ஒருவரும் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் உள்ள சோழர் கால ஆலயம் தொடர்பில் இந்தியா ஆய்வுகளை நடத்தவேண்டும் என கோரிக்கை

இலங்கையில் அமைந்துள்ள கோயில் ஒன்றில் ஆய்வு களை நடத்த வேண்டும் என்று கோரி மத்திய, மாநில அரசுகளுக்கு தமிழகத்தின் முன்னாள் பொலிஸ் அதிகாரி மாணிக்கவேல் கடிதம் எழுதியுள்ளார்.

சோழ மன்னர்கள் ஆட்சி செய்ததாகக் கூறப்படும் இலங்கை யில் உள்ள பழைமையான இந்தக் கோயிலில் தொல்லியல் துறை ஆய்வு நடத்த வேண்டும் என்று அவர் தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

இலங்கையை 78 ஆண்டுகளுக்கும் மேலாக சோழ மன்னர் கள் ஆண்டனர் எனக் கூறப்படுகிறது. இந்நிலையில் எடகடே என்ற கிராமத்தில் 1009 ஆண்டுகளுக்கு முன்னர் ராஜராஜ சோழன் கட்டிய உத்தம சோளீஸ்வரன் உடைய மகாதேவர் கோயில் அமைந்துள்ளதாக மாணிக்கவேல் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பொன் மாணிக்கவேல் குறிப்பிட்டுள்ள அந்த கிராமத்தின் சரியான அடையாளத்தை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. இந்நிலையில் அந்தக் கோயிலை 1912 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிறிஸ்தவ கல்வெட்டு ஆய்வாளர்கள் கண்டறிந்தனர் எனவும் கூறப்படுகிறது.

வரலாற்று பொக்கிஷமாக இருக்கும் இந்த கோயிலில் மிகப் பெரிய கருங்கல் தூண் ஒன்றும் உள்ளது. அதில் உள்ள தமிழின் பழைமையான வட்டெழுத்துகள் ராஜராஜ சோழனின் 78 ஆண்டு கால ஆட்சியைக் குறிப்பிடுவதாகவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் 21 ஏக்கர் நிலம் கோயிலுக்கு தானமாக அளிக் கப்பட்டு அதன் வருமானத்தைக் கொண்டு கோயிலை பராம ரிக்க வேண்டும் என்று கல்வெட்டில் கூறப்பட்டுள்ளதாகவும் பொன் மாணிக்கவேல் தெரிவித்துள்ளார்.

எனினும் சோழ மன்னர்கள் ஆட்சி செய்ததை குறிக்கும் பழைமையான கருங்கல் தூண் பற்றிய தகவல் இந்திய தொல் லியல் துறைக்குத் தெரியவில்லை என்று மாணிக்கவேல் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே தமிழக தொல்லியல் துறையும் மத்திய கலாசாரத்துறையும் இலங்கை அரசுடன் கலந்துரையாடி, ஆயிரம் ஆண்டுகள் பழைமையான கோயிலில் ஆய்வு நடத்த வேண்டும் என்றும் பொன் மாணிக்கவேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

உ
முருகன் துணை.

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்
# செவ்வழி நயனம்

# கடவுள் வழிபாடு

சைவ சமயத்தில் கடவுளை வழிபட்டுப் பயன் கொள்வதற்கு நான்கு நெறி முறைகளில் ஆற்றுப் படுத்தியுள்ளனர்.

அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவையாகும். இவற்றுள் எது ஒருவர்க்கு சாத்தியமாக உளதோ, அந் நெறியில் அவர் கடவுளை வழிபட்டுப் பயன்கொள முடியும் என வேதங்கள் உரைக்கின்றன.

சரியை வழிபாட்டு நெறி என்பது ஒவ்வொருவரும் தத்தமது உடலினால் வழிபடும் முறைமையினைச் சுட்டி நிற்கின்றது. திருக்கோயிலை வலம் வருதல் மற்றும் திருக்கோயிலை உள்ளும் புறமும் கூட்டிப் பெருக்கி, மெழுகி, நீர்தெளித்து கோலமிட்டுப் புனிதம் பெற வைத்தல், திருநந்தவனம் அமைத்தல், அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து, காலைக் கடன் முடித்து, ஸ்நானம் செய்து ஆசாரத்துடன் வண்டுகள் தேன் அருந்த மலர்களை நாடுவதற்கு முன்னர் கைவிரல் நகங்கள் மலரில் தொடாத வண்ணம் பக்குவமாகக் கொய்து அவற்றைத் திருக்கோயிலுக்கு வழங்கல். பூமாலை புனைந்து கடவுளுக்குச் சாத்தக் கொடுத்தல், மேலும் கோயில் தீபங்களை விளக்கி சுத்தம் செய்து நெய்விட்டு ஏற்றுதல் போன்றன கொள்ளப் படுகின்றன.

கிரியை வழிபாட்டு நெறியில் அடியவர்கள் ஒவ்வொருவரும் மொழியினால் – வாய்வழி வழிபடும் முறையினைக் குறிக்கின்றது. சைவ சமயமும் தமிழ் மொழியும் இணைந்த தொடர்பு கொண்டவை. தமிழ் மொழியில் எமது சமய நாயன்மார்களும் ஆழ்வார்களும் எமக்களித்த தேவார திருமுறைகளைளையும் பாசுரங்களையும் திருக்கோயில்களில் இறைவனை மனத்திருத்தி இசைத்தல், ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுதல் போன்றன கிரியை வழிபாட்டு முறையாகும்.

வழிபாட்டு முறைகளில் அடுத்தது யோகம் எனப்படுகின்றது. இம்முறை பூரணமாக மனதினால் வழிபாடு செய்யும் வகையது. உள்ளத்தை இறைவனிடம் ஒன்றித்து அவர் திருப்பாதங்களை மனத் திருத்தி தியானம் செய்தல், பூசை செய்தல் இங்கு முக்கியம் பெறுகின்றன. இறைவனை உளத்திருத்தி, கையில் உருத்திராட்ச மாலை அல்லது மணிமாலை கொண்டு அவற்றை கைவிரல்களால் அசைத்த வண்ணம் ஐந்தெழுத்து மந்திரத்தை மனத்தில் உச்சரித்து வழிபடலும் இம்முறையாகின்றது. .

நான்காவது வழிபாட்டு முறை ஞான நெறியாகும். மேற்கூறிய மூன்று முறைகளில் கடவுளை உள்ளன்புடன் வணங்கி ஒழுகி வந்தால் அவர் எமக்கு ஞானத்தை உணர்த்துவார். குருநாதராக வந்தோ அல்லது வாழும் மனிதராக எம்மோடு இணைந்தோ எமக்கு ஞானத்தை உணர்த்தி அருள்வார் என்று கூறப்படுகின்றது. திருஞானசம்பந்தருக்கு ஞானப்



பால் வழங்கியமையும், சுந்தரரைத் தடுத்தாட் கொண்டமையும், மணிவாசகருக்கு குருந்தமர நிலழலில் அருளாசி தந்தமையும் கடவுள் ஞானத்தை உணர்த்தியமைக்கு சில உதாரணங்கள்.

எம்மைஆற்றுப்படுத்தும் எமது ஆசிரியர்களும், எமது பெற்றோர்களும், பெரியோர்களும் இறைவன் மனித வடிவில் வந்து எமக்கு ஞானத்தை அருளும் செயலுக்கு சான்று. அவர்களை என்றும் மதிப்போம்.

கடவுளைத் தினம் துதித்துப் பயன் பெறுவோம்.

- செழியன் -
(ஆஸ்திரேலியா)

# தில்லைத் திருக்கோயில் இசைமரபு



சைவச்சமயத்தைப் பொறுத்துவரை 'கோயில்' என்றால், அது சிதம்பரத்தையே குறிப்பதாகும். விழாக் காலத்தில் நாகசுரத்தில் வாசிக்கப்படவேண்டிய இராகங்கள் மற்றும் இசைவகைகள் யாவும், அங்கே திட்டமாக விதிக்கப்பட்டிருக் கின்றன. முதல் திருநாளில், ஆரபி அல் லது தன்னியாசி; இரவு புறப்பாட்டின் போது சங்கராபரணம்; இரண்டாம் நாளில் ரீதி கௌளை, திருநாளில் மாயா மாளவ கௌளை.

மூன்றாம், நான்காம் நாளுக்குச் சக்கரவாகம். ஐந்தாம் நாளன்று 'தெருவடைத்தான்' எனப்படும் வாகனத்தைச் சுவாமி வந்தடையும் வரை நாகசுரமும் பின்பு, நட்டும் முட்டும் ஒலிக்கும். ஆறாம் நாள் சண்முகப்பிரியா அல்லது தோடி. ஏழாம் நாளில் காம்போதி அல்லது வராளி. எட்டாந் நாளில், நாதநாமக் கிரியா இராகத்திலமைந்த 'ஒடகூரு'. தேர்த் திருநாளாகிய, ஒன்பதாந்தினத்தன்று சுவாமி தேரில் எழுந்தருளும் போது தேர் மல்லாரி, ஆயிரக்கால் மண்டபத்தைச் சுவாமி அடைந்ததும் ஆகிரி, நீலாம்பரி இராகங்களிலுள்ள எச்சரிக்கைப் பாடல்கள். அவற்றைத் தொடர்ந்து ஏதேனுமொரு பதம். பதினோராந் திருநாளன்று உசேனி ராகம் ஆகியவை இடம் பெற்றிருத்தல் வேண்டுமென்ற இசை மரபு, தில்லை கோவிலில் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருவதாகும்.

(ஆலயவழிபாட்டில் இசை என்னும் நூலில் இருந்து....)

செவ்வழி நயனத்திற்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
sevvalinayanamgmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம்.
– ஆசிரியர் –

# பதிகமும் பொழிப்பும்

பாடல் – 05

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின்தாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.

பொருள்:

நல்ல மனப்பாங்கு உடையவர்களையும், தவம் செய்வோரையும் உன் விதவிதமான உருவத்தை, வடிவத்தை மண்



ணிலும், மரத்திலும், கல்லிலும், கனிமத்திலும், படிமங்களாக வடித்தும், ஓவியங்களாக வரைந்தும், மனம் குளிரக்காண வைத்து பூஜிக்கவும், வணங்கவுமென, புண்ணியம் செய்யும் அந்தக் கலைஞர்களைக் காப்பவனும், பிச்சை எடுப்பது என்ற சொல்லுக்கு ஏற்றவாறு பிச்சையை நீயே பிடுங்கி எடுத்து (கர்மவினை) பதிலுக்கு ஞானத்தை இட்டு, முக்தியை கொடுக்கும் விநோதமான தலைவனே! குணக்குன்றுகளான நல்லோர் பாடும் பாடல்களை அவர்களோடு சேர்ந்தும், தனித்தும் பாடி, உனது பொன்னார் திருவடித் தாமரைகளை வணங்கும், கட்டுக் கடங்காத அன்பை உன்மேல் வைத்துக் கொண்டு, எவ்வளவு அடக்கித் தாங்கியும் நில்லாது, கட்டுப்பாட்டை மீறிக்கரை உடைத்துப் பாயும் கண்ணீரோடும் தலைவா! உன் திருவடி நீழலுக்குள் சற்றும் விலகி நிற்காமல் நீயே கதி எனக் கிடக்கும் மெய் அடியவர்கள் இடர்களையெல்லாம் களைந்து அரவணைப்பாய் எம் ஐயனே! இறைவா! திருநெடுங்களம் வாழும் முதல்வனே! பெரியோனே!

திருச்சிற்றம்பலம்.

– ஓவியமும் விளக்கமும்:
பத்மவாசன் –
(இந்து கலாசார திணைக்கள
வெளியீட்டிலிருந்து...)

# பொய் சொல்லலாகாது




பொய்யாவது உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவுஞ் சொல்லல். பொய் மிகவும் இழிவுள்ளது. ஒரு பொய் சொன்னவன், அதைத் தாபிக்கப்புகின், ஒன்பது பொய் சொல்லல் வேண்டும். 'நான் சொன்ன பொய்யைப் பொறுத்துக்கொள்ளல்வேண்டும்' என்பானாயின், ஒன்றுடனொழியும். பொய்சொல்லத் துணிகின்றவன் களவு முதலிய தீமைகளைச் செய்வதற்கு அஞ்சான். பொய் சொல்லலாகிய பாவமொன்றை ஒழிப்பின், அதுவே வழியாக மற்றப் பாவங்களெல்லாந் தாமே ஒழிந்துவிடும். பொய்யன் பொய்யை சொல்லுகிற பொழுதும் பிறர் அதனை நம்பார். ஆதலால், விளையாட்டுக்காயினும் பொய் சொல்லாகாது.

மெய் சொல்லுகிறவனுக்கு அதனால் ஒருகேடுவந்தாயினும் அவனுள்ளத்திலே மகிழ்ச்சி உண்டாகும். அவன் பகைவர்களும் அவனை நன்கு மதிப்பார்கள். பிறராலே நன்கு மதிக்கப்படவும் தன்காரியஞ் சித்திபெறவும் விரும்புகின்றவன் எப் பொழுதும் தன்மனத்தோடு பொருந்த மெய்யே பேசல் வேண்டும். ஒருவன் தன்மனம் அறிந்ததொன்றைப் பிறர் அறிந்திலர் என்று பொய் சொல்லாதிருக்கக் கடவன். பொய் சொன்னானாயின், அவன் மனமே அப்பாவத்துக்குச் சாட்சியாய் நின்று அவனைச் சுடும்.

உண்மை சொல்பவன் இம்மையிற் பொருளையும் மறுமையிற் புண்ணிய லோகத்தையும் அடைவன். சத்தியமே மேலாகிய தானமுந் தருமமுமாம். எவனுடைய புத்தி சத்தியத்தில் நிற்குமோ அவன் இகத்திலே தெய்வத்தன்மையை அடைவன். சத்தியத்தின மிக்க தருமமும் அசத்தியத்தின மிக்க பாவமும் இல்லை.

பொய்ச்சான்று சொன்னவரும், பொய்வழக்குப் பேசினவரும்: வழக்கிலே நடுவு நிலைமையின் வழுவித் தீர்ப்புச் செய்தவரும் ஏழுபிறப்பில் ஈட்டிய எல்லாப் புண்ணியங்களையுங் கெடுத்தவராவார். பிரமவதையுஞ் சிசுவதையுந் தந்தை வதையுஞ் செய்தவராவர். மிகக் கொடிய ரௌரவ நரகங்களை அடைவர். அவரை இயம தூதர்கள் வாயிலே அடித்து, அவருடைய நாக்கையும் அறுத்து, பல துக்கங்களையும் உறுவிப்பார்கள். பின்னும் அவர் ஊர்ப்பன்றி, கழுதை, நாய், நீர்க் காக்கை, புழு என்னும் பிறப்புக்களிற் பிறந்து, மனிதப் பிறப்பிலே பிறவிக்குருடருஞ் செவிடருங் குட்ட நோயினரும் வாய்ப்புண்ணினரும் ஊமைகளுமாய்ப் பிறப்பர். மிக்க பசிதாகமுடையவராகித் தம் பகைவர் வீட்டிலே தம் மனைவியரோடும் பிச்சையிரந்து உழல்வர்.

(இந்து கலாசார திணைக்கள
வெளியீட்டிலிருந்து....)

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-63

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசமைப்பு அமுலாக்கப்பட்ட காலங்களில் தான் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் உருவாகின. அவற்றின் பங்களிப்பாக இனப்பிரச்சினைப் போராட்டம் வளர்ந்தது. அதன்பின் சந்திரிகாவின் 'சமாதான' அரசமைப்பின் பிரேரணை உருவாகி, நோர்வே சமாதான காலங்களில் சமஷ்டி முறையில் ஒன்றை உருவாக்கலாம் என்ற இணக்கம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் இப்போது திரும்பவும் வடிவமைப்பற்ற, இனப் பிரச்சினையை உள்ளடக்காத அரசமைப்புகள் பற்றியே பேசப்படுகின்றது.

ஆதலால் புலம்பெயர் அமைப்புகளையும், அவற்றின் தாக்கங்களையும், அவை இன்றைய நிலைக்கு வழிகோலியமையையும் பற்றி சிறிது பார்ப்பது நன்று.

### வரலாற்றில் புலம்பெயர் சமூகம்

தமிழ் மக்களின் வரலாற்றில்1956 ஆம் ஆண்டு சிங்கள மட்டும் சட்டத்தின் பின் பல தமிழ் புத்திஜீவிகள் வெளிநாடுகளுக்கு – முக்கியமாக இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு – முதன்மையாகக் குடிபெயர்ந்தாலும், இவர்கள் அங்கிருந்த பொதுவான



'இலங்கையர் அமைப்புக்களுடனையே' ஆரம்பத்தில் தங்களது சமூக ஈடுபாடுகளுக்காக இணைந்து இருந்தார்கள்.

சில புத்திஜீவிகள் ஆஸ்திரேலியாவில் தொழில்நிமித்தம் குடியேறி இருந்தாலும், வெள்ளையர் மாத்திரமே நிரந்தர குடியுரிமை பெறலாம் என்ற சட்டங்கள் 1975 வரை இருந்தமையால் – அனேகமாக இலங்கையிலிருந்து குடியேறியவர்கள் – தமிழ், சிங்கள மக்கள் – அச்சமயம் அங்கிருந்த பறங்கியர்களால் அநேகமான புலம்பெயர் அமைப்புகள் ஆக்கப்பட்டமையால் அவற்றுடன் இணைந்தனர்.

ஐரோப்பாவின் மற்ற நாடுகளுக்கு 1977இல் இருந்து அகதிகளாக வெளியேறியவர்கள் பலமான புலம்பெயர் சமூகமாக வளர்ந்தனர். இதே நிலைமை 1977 க்குப் பின் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் ஏற்பட்டு, தமிழ் மக்கள் தங்களது இனரீதியான அமைப்புகளை அமைத்து 1983 முதல் தொடர்ந்த குடியேற்றங்களால் பலமானவையாக மாறினார்கள். இவற்றுக்கு இங்கிலாந்து ஐரோப்பிய நாடுகளும் விதிவிலக்கு அல்ல.

ஆயினும் அந்தக் காலங்களில் தமிழீழத்திற்கான முன்னெடுப்புகள் பலமாக அமெரிக்காவிலேயே அங்கிருந்த புலம்பெயர் மக்களால் எடுக்கப்பட்டன.

1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து விடுதலைக் குழுக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சவாலாக புறப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் 1986இல் தாங்களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிகள் என அறிவித்து, மற்றான அரசியல் தேர்வுகள் யாவும் புறந்தள்ளப்பட்டன.

அமெரிக்காவில் டாக்டர் பஞ்சாட்சரம் தமிழர விடுதலைக் கூட்டணிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உறவுகளைச் சீர்படுத்தி, ஓர் இணைந்த தலைமையை அமைக்கப்பாடுபட்டாலும், அவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினால் நிராகரிக்கப்பட்டன. இவை குறித்து சிறிது விவரமாக எனது முன்னைய 'இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஒரு திசை நோக்கு' என்ற தொடரில் குறித்திருந்தேன். அதற்குப் பின்நடந்த ஆயுதப் போராட்ட அரசியலில் புலம்பெயர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தீர்மானங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் நியதிக்களுக்கும் ஏற்ப அவற்றுக்கு இணைந்து செயல்பட்டவர்கள் பங்குதாரர்களாக்கப்பட, விடுதலைக்கான அயராது உழைத்த புத்திஜீவிகளில் பலர் சோர்வுற்று தொடர்ந்து தங்களது பங்களிப்புகளை செய்ய முன்வரவில்லை.

ஆனாலும் விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பிலும் விசுவாசத்திலும் நம்பிக்கை கொண்டவர்கள் அவர்களது கொள்கைகளையும் இலட்சியங்களையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயுதப் போராட்டமோ அன்றில் 'கோட்டா கோ ஹோம்' என்ற சிங்கள மக்களிடையே எழுந்த எழுச்சி போல, தமிழ் தலைவர்கள் இலட்சியம் மாறாது, பாதைகள் மாறலாம் என்று, முள்ளிவாய்க்காலின் பின் மக்களைத் திரட்டித் தீர்வுக்காகப் போராடாதது, ஸ்ரீலங்காவின் இறைமைக்கு தொடர்ந்தும் சவால் தந்த தாக்கங்களை வைக்காதது, மக்களது உணர்ச்சிகளைக் குளிர வைத்து உறையும் நிலைக்கு எடுத்து வந்து, தேர்தல்



பாதைகளுக்குப் பாவித்தது, அவர்களின் இன்றைய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அதன் எதிரொலியாகப் புலம்பெயர் சமூகம் கூட அவர்கள் வாழுகின்ற நாடுகளில் சட்டதிட்டங்களுக்கு அமைய சர்வதேசத்துக்கும் ஐ.நாவின் கட்டமைப்புகளையும்தான் நம்பி சமர்ப்பணங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். சுயநிர்ணமித்துக்கோ தனிநாடு என்று அங்கீகாரத்துக்கோ சர்வதேச அனுசரணை ஐ.நாவின் ஊடாகவே வர வேண்டும். அதற்குப் பலமான அரசியல் பேரம் பேசக்கூடிய நாடு அன்றில் நாடுகள் ஆதரவாக வேண்டும். அதற்கான காலங்கள் நீண்டவை. 1976 வட்டுக்கோட்டை தீர்மானம் எழுந்தது. 1982 – 84 களில் தமிழர் பேரவை அமெரிக்காவில் ஆக்கிய தீர்மானங்கள் முன்னெடுக்கப்படும் என்று 2022 நடந்த பேரவை அறிவிப்புக்களும் பறைசாற்றுகின்றன.

அமெரிக்காவில் எத்தனையோ ஜனாதிபதிகள், உப ஜனாதிபதிகள் பதவியில் இருந்த போதெல்லாம் அவரவர்களின் பெயர்களில் தமிழ் மக்கள் அமைப்புகள் நடத்தினார்கள். ஆனாலும் இதுவரை இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அஸ்திவாரம் இரட்டை ஆட்சிதான் என்ற உத்தரவாதங்களையோ சொல்லாடல்களையோ கேட்க முடியவில்லை. அதற்கான காலங்கள் உருவாகும் புவியியல் மாற்றங்களால், சாதகமான சந்தர்ப்பங்களால், தமிழ் மக்களையும் மீறி எழுப்பவையாக இருக்கலாம் என்று ஸ்ரீலங்காவின் இன்றைய அரசியல் முரண்பாடுகளையும் அராஜகங்களையும் பார்க்கும்போது எண்ண வேண்டியுள்ளது

ஆனால் அப்படியான காலங்களும் அறிகுறிகளும் எழுகின்றன. அவற்றைத் தமிழ் மக்கள் எப்படி தங்கள் விமோசனத்திற்காகக் கையாளுகின்றார்கள் என்பதை பொறுத்து உள்ளது விடயம்.

கோட்டாபய ஓடி ஒளிவதும், அயல் நாடுகளில் தஞ்சம் கேட்பதும், கேவலமடைவதும், ஜுலை மாதத்தில்தான் நடக்கிறது.

ஜுலைக்கும் தமிழ் மக்களுக்கும் ஆடி மாதத்தின் ராசி இருக்கிறது போலப் படுகிறது. அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள் பல இந்த மாதத்தில்தான் ஒப்பேறின. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொல்லப்பட்டமையும் இந்த மாதத்தில்தான்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தேன் என்ற திமிர்த்தனத்தில் நிர்வாகங்களை தான்தோன்றித்தனமாகக் கையாண்டவர், தான் வெறியாட்டம் ஆடிய நாள்களின் கர்மங்கள் தன்னை மாத்திரம் அல்ல, தனது மகனையும் கூட அமெரிக்காவில் தெருவுக்கு இழுத்து, சந்தி சிரிக்க வைக்கிறது, தனது மனைவியின் பிரியமான நாய்க்குட்டியை அமெரிக்காவிலிருந்து அழைத்துவர பிரத்தியேகமாக ஸ்ரீலங்கன் விமானத்தை அனுப்பியவர், அதைப்பற்றிக் கேட்ட பத்திரிகை நிருபவரை 'உயிருடன் இருக்க விரும்புகிறாயா?' என்று கேட்டவர், இன்று ஓடும் போதும் முன்னாள் ஜனாதிபதி என்று கூடப் பொது விமானங்களில் போக முடியவில்லை, நாய்க்குட்டியைக் கூடக் கூட்டிச் செல்ல முடியவில்லை.

1981 இல் கல்வி அமைச்சராக இருந்த காலங்களில்தான் தமிழ் மக்களின் பொக்கிஷமான யாழ் பொது நூலகம் மட்டுமல்ல, தமிழர் வாழும் பகுதிகளில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகள், அங்கிருந்த நூலகங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. அதன் பிரதான நோக்கம் தமிழ் மக்களின் கல்வியின் மூலதனங்கள் நிர்மூலமாக்கப்பட வேண்டும் என்பதே. அச்சமயம் கல்வி அமைச்சராக இருந்த ரணில் அவற்றைக் கண்டிக்கவில்லை. இவையெல்லாம் பயங்கரவாதிகளுக்கு எதிராக இராணுவம் முன்னெடுத்தவைகளில் இடையில் அகப்பட்டவை எனக் கைவிரித்து விட்டார். அதற்கு சூத்திரதாரிகளாக இருந்தவர்கள் அல்லது தீயிட்டவர்கள் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. ரணில் மனச்சாட்சியுடன் நடந்திருந்தால் தனது கல்வி அமைச்சின் அதிகாரங்களைப் பாவித்து அவற்றை மீளக் கட்டியிருக்கலாம். ஆனால் அவர் சேர்ந்து இருந்த அரசியலுக்கு அவர் கடமைப்பட்டிருந்தார்.

இன்று சிங்கள மக்களே அவருக்கென்று அவரது பெற்றோர் விட்டு சென்ற ஒரே ஒரு வீட்டையும், அதில் அவர்கள் கட்டிக் காத்த நூலகத்தையும் எரிக்கும் நிலைமை வந்துள்ளது. அங்கு யாழ்ப்பாண நூலகத்தைப் போலவே இலங்கையின் வரலாறு சம்பந்தப்பட்ட எவ்வளவோ புத்தகங்களும் படங்களும் அழிக்கப்பட்டன எனக் கூறி நிலை குலைந்து புலம்புகிறார் ரணில். இவற்றைப்பற்றி குதூகலம் கொள்வது பண்பல்ல. கர்மம் தனது வினையை ஒவ்வொருவராக ஆக்கிக் கொண்டிருப்பதில் ஆண்டவனின் ஓம்கார ஒலிகளைக் கேட்கலாம்.

அவற்றை தமிழ் மக்கள் நாட்டிலும் புலம்பெயரிலும் தங்களது முரண்பாடுகளால் ராகு கேதுக்களாக இயங்கி, சனீஸ்வரனின் நீச பார்வை விழாமல் இருக்க, புரிந்துணர்வோடும் தூர நோக்கோடும் பயணிக்க வேண்டும்.

(வளரும்)